# டாபிந்து

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது

ஆரம்பம் 1984

மலர் 39 | இதழ் 03 | 2023 - தைமாத பதிப்பு




# மனித உரிமைகள் தினம்

ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் 10ம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினமாக கொண்டாடப்படுகின்றது. 1948ம் ஆண்டு மார்கழி மாதம் 10ம் திகதி மனித உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரகடனப்படுத்துதலின் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் மனித உரிமைகள் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதன் இவ்வருட (2022) கருப்பொருளாக அமைவது, அனைவருக்கும் சுதந்திரம், நீதி மற்றும் பெருமை என்பன கிடைக்கச்செய்வதாகும்.

மனிதனாக இருப்பதனால், பெற்ற உரிமைகள் அனைத்தும் மனித உரிமைகள் என அறிமுகப்படுத்தலாம். இவற்றை சிவில், அரசியல் மற்றும் கலாசார ரீதியாக குறிப்பிடலாம். மனித உரிமை என்பது உலகளாவிய உரிமையாகும். இதன்மூலம் தெளிவுபடுத்துவது யாதெனில், அவர்கள் யாராக இருந்தாலும், அனைவரும் சமமாக மற்றும் கௌரவமாக மதிக்கப்பட வேண்டும். மனிதர்களை ஆண்-பெண் பாலினம், இனம், அவர்களின் தோல் நிறம், பாலியல் நோக்குநிலை, மதம் மற்றும் அவர்கள் பிறந்த நாடு போன்ற காரணங்களால் பாகுபாடு காட்டக் கூடாது.

இலங்கை மனித உரிமைகள் திணைக்களத்தின் மூலம் எமது நாட்டினுள் அடிப்படை உரிமைகள் அவற்றை மீறுதல் தொடர்பாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 1996ம் ஆண்டு இலங்கை மனித உரிமைகள் திணைக்களம்

8ஆம் பக்கம் பார்க்க...

## உள்ளே!


பக்கம் 03 – சட்ட அறிவு
பக்கம் 04 – மனித கடத்தல் தினம்
பக்கம் 05 – பாலியல் வன்முறை
பக்கம் 06-07 – எமது பணி
பக்கம் 8 – மனித உரிமைகள் தினம்
பக்கம் 09 – வெளிநாட்டுச் செய்திகள் / எமது எண்ணம்
பக்கம் 10 – ஆரோக்கியம்
பக்கம் 11 – சர்வதேச கல்வி தினம்

**வியர்வைத்துளி கூட்டமைப்பு**
221, வெலபட வீதி, கட்டுநாயக்க.
தொ.பே: 011 4 851 383
மின்னஞ்சல்: dabindu.infoco@gmail.com
முகநூல்: dabindu collective sri lanka:

# குடிமக்களின் உரிமைகளை உறுதி செய்வதற்கு தீர்க்கமாக முன்வருவோம்

நாட்டு மக்களின் உயிர்வாழ்வதற்கான சுதந்திரமானது, தற்போது நிலவிவரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மீறப்பட்ட சந்தர்ப்பங்களில் அரச சொத்துக்களை பயன்படுத்தி மக்கள் எதிர்ப்பை கவனிக்காது, நடாத்திய 75ஆவது சுதந்திர தினத்தின் குறுகிய நோக்கத்தை செயற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும்.

மக்களின் அடிப்படை தேவைகளை பெற்றுத்தர முடியாத ஆட்சியாளர்கள் கடந்த 75 வருடங்களாக மோசடி, துஷ்பிரயோகம், இலஞ்சம் என்பன மூலம் அவர்களின் ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள மேற்கொண்ட முயற்சியினால் ஓர் நாடாக எம்மால் முன்னேற்றத்தை காண முடியவில்லை. பலவீனமான ஆட்சியாளர்களினால் தற்போது இலங்கையில் 36% ஆனோர் உணவுப்பாதுகாப்பின்மையால் உள்ளனர் என்பது, உலக உணவுத்திட்ட அறிக்கையின்படி காண்பிக்கப்படுகினறது. அத்தோடு ஐந்து வயதுக்கு குறைவான அதிமந்த போசனையுள்ள 56000 குழந்தைகள் பற்றிய விபரம் UNICEF குடிவரவு அறிக்கைகளின் மூலம் காண்பிக்கப்படுகின்றது. 2023 தை மாதம் இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது 69.8%ஆக வீக்கமடைந்துள்ளது. தற்போதைய இலங்கையின் வெளிநாட்டு கடன் அமெரிக்க டொலர் ஆகும். அதில் 40% தனிநபர் வியாபாரத்தின் மூலம் எடுக்கப்பட்டதுடன் இக்கடனை அடைப்பதற்காக நாட்டு மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வரி செலுத்தி வருகின்றனர்.

கடன் சுமை, வாழ்க்கைச் சுமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுதந்திரம் கொண்டாடுவதற்கு, அதைப்பற்றி பெருமைப்படுவதற்கு, கௌரவமான குடிமகனாக வாழ்வதற்க்கு உரித்த சூழல் எமக்கு அமைந்துள்ளதா? அது பற்றி பேசுவதற்கு, அதற்காக முன்னிற்பதற்கு உரிமை காணப்படுகின்றதா? அடக்குமுறை, சிறைப்படுத்தல், மூலம் மக்களின் வாயை அடைத்து சர்வாதிகாரத்தை பலப்படுத்த அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் கட்சிகளுக்கு நேர்மையாக கொண்டாடக் கூடியதான சுதந்திரம் எங்கே?.

தற்போதைய நிலையில் தொழிற்சாலைகள் மூடப்பட்டு, அடிப்படை சம்பளத்தை மட்டும் வழங்கி நிலையில், பல வருடகாலமாக சம்பள உயர்வுகள் எதுவுமின்றி, தொழிலாளர் சட்டங்களை மாற்றியமைத்து, தொழிலாளர்களை மென்மேலும் கீழ்தள்ளி உழைப்பை சுரண்டி எடுக்கும் ஆட்சியாளர்களுக்கு எதிராக குரல் கொடுப்பதற்கு அனைத்து தொழிலாளர்களுக்கும் சக்தியை வழங்க பிரார்த்திப்பதுடன், இதற்காக அனைத்து தொழிலாளர்களும் கைகோர்த்து ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# சுதந்திரமான ஆரோக்கியம்?



சவால்கரமான ஒடுக்கு நிலைக்குள்ளான இலங்கையானது, மேலும் வீழ்ச்சியடைய காரணமாக இருப்பது, பெருமைத்தனம் மிக்க அரசியல்வாதிகளின் ஆட்சியின் தீர்மானமெடுத்தலானது மிகுந்த பயனளிக்காமையினாலாகும். இலங்கைவாழ் மக்கள் நாளுக்கு நாள் அனுபவிக்கும் பொருளாதார நெருக்கடியினால் அவதிப்பட்டு, கடன்சுமையைத் தாங்கிக் கொண்டு மந்த போசணையுள்ள நாடுகளின் வரிசையில் முதலாம் இடத்தைப் பிடிக்கின்றனர். சுதந்திரமான ஆரோக்கியத்தினால் பயன்பெற்ற இலங்கையருக்கு இன்றைய காலகட்டத்தில், மருந்து பற்றாக்குறைக்கு மத்தியில் அத்தியாவசிய மருந்து அல்லது மருந்தின்மையால் உயிரை இழுத்துக் கொண்டு வாழும் நிலைமை காணப்படுகின்றது. நாட்டினுள் பதிவுசெய்யப்பட்ட 300 அத்தியாவசிய மருந்து வகைகளில், 150இற்கும் மேற்பட்ட மருந்துகள் இன்னும் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படவில்லை. தற்போது சிகிச்சையின் போது பயன்படுத்தப்படும் மயக்க மருந்து பற்றாக்குறையினால், சிகிச்சை மேற்கொள்ள முடியாமல் மருத்துவர்கள் கடும் அழுத்தத்திற்கு முகங்கொடுத்து வருகின்றார்கள். மேலும், போலி வாந்திகள் கூறி காலத்தைக் கடத்தும் வெளிநாட்டு சுகாதார சேவையைப் பெறும் அரசியல்வாதிகள், அப்பாவி மக்களின் சுதந்திரமான ஆரோக்கிய உரிமையையும் தட்டிப் பறித்துக் கொண்டிருக்கின்றனர்.

யசாரா விது




# சட்ட அறிவு

**1954ம் ஆண்டு 19ம் இலக்கத்தையுடைய கடை மற்றும் தொழில்ரீதியான தொழிலாளர்கள் தொடர்பான கட்டளை**

1954.08.04ம் தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கடைகள் மற்றும் தொழிற்சாலை ஊழியர்கள் தொடர்பான கட்டளையானது, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பொருளாதார மற்றும் கலாசார உரிமை தொடர்பான சர்வதேச மாநாட்டின் அடிப்படையில் செயற்படுகின்றது. இக்கட்டளையின் பொருட்டு, கடைகள் மற்றும் தொழிற்சாலை ரீதியாக சேவையில் ஈடுபடும் பணிப்பெண்களுக்காக மகப்பேறு வசதிகள் வழங்கும் போது, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 103வது மகப்பேறு மருத்துவம் தொடர்பான மாநாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இக்கட்டளையின் நோக்கமாவது, கடைகள் மற்றும் தொழிற்சாலை பிரிவுகளில் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு தொழில் வசதிகளை ஏற்பாடு செய்தல், வேலை நேரங்களை தீர்மானித்தல், மேலதிக வேலை நேர கொடுப்பனவு மற்றும் விடுமுறை தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளல், ஊதியம் தொடர்பான சட்டங்களை செயற்படுத்தல் மற்றும் இக்கட்டளைகளை வெளிப்படுத்தும் வகையில் பெண்தொழிலாளர்களுக்கு மகப்பேற்று வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தலாகும். இதன் மூலம் இலங்கையினுள் காணப்படும் அனைத்து கடைகள் அல்லது தொழிற்சாலைகளில் சேவைபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் வெளிப்படும்.

இக்கடிதத்தின் மூலம் மகப்பேற்று விடுமுறை தொடர்பாக விடயங்களை முன்வைத்தலாகும்.

**மகப்பேற்று விடுமுறை**

**இங்கு உமக்கு உரித்தாக வேண்டிய மகப்பேற்று விடுமுறை கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்படுகின்றது.**

- குழந்தை பிறப்புக்காக முழுமையான தொழில்ரீதியான விடுமுறை 84 நாட்களாகும். அதிலும் 14 நாட்கள் பிரசவத்திற்கு முன்பே பெற்றுக் கொள்ள முடியுமாவதுடன். மிகுதியுள்ள 70 நாட்களை பிரசவத்திற்கு பின்பு பெற்றுக் கொள்ள முடியும். பிரசவததிற்கு முந்திய 14 நாட்கள் அல்லது அதிலும் சில நாட்கள் விடுமுறை எடுக்காதவிடத்து, 70 நாட்களுக்குப்பின், அவ்விடுபட்ட விடுமுறைகளை பெற்றுக் கொள்ள முடியும்.
- குழந்தை உயிருடன் பிறக்காவிடின், இறந்த குழந்தை பிறக்குமாயின்,தொழில் ரீதியான விடுமுறை 42 நாட்கள் வழங்கப்படும். அதில் 14 நாட்கள் பிரவத்திற்கு முன்பே பெற்றுக் கொள்ள முடியும். மிகுதியுள்ள 28 நாட்களை பிரசவத்திற்கு பின்பு பெற்றுக் கொள்ள முடியும். பிரசவததிற்கு முந்திய 14 நாட்கள் அல்லது அதிலும் சில நாட்கள் விடுமுறை எடுக்காதவிடத்து, 28 நாட்களுக்குப்பின், அவ்விடுபட்ட விடுமுறைகளை பெற்றுக் கொள்ள முடியும்.
- இறந்த குழந்தை பிறப்பின்போது கீழ்க்குறிப்பிட்ட விதிமுறைகள் பூரணப்படுத்தப்படாதவிடத்து, அப்பெண்தொழிலாளிக்கு மகப்பேறு பரிசோதனை அல்லது மகப்பேறு விடுமுறையை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது.
- குறைந்தது, கரு உருவாகி 28 வாரம் முழுமையடைந்து இருக்க வேண்டும்.
- 28 வாரம் தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருப்பின், கருவின் நீளமானது, குறைந்தது 12 அடியுடையதாக அல்லது கருவானது, 2 கிலோகிராம் நிறையுடையதாக இருப்பதுடன். இவ்விதிமுறைகளில் ஒன்றையாவது, பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.
- பிரசவமானது, உயிருள்ள குழந்தைப்பேறு அல்லது உயிரற்ற குழந்தைப்பேற்றை அடிப்படையாகக் கொண்டது.
- தொழில்துறையினால் வழங்கப்படுகின்ற முழு விடுமுறையை கணிப்பிடும் போது, ஒரு நாளுக்கான அல்லது அரைநாளுக்கான வார விடுமுறையின் எண்ணிக்கையானது, போயா தின விடுமுறை மற்றும் பொது விடுமுறை தினங்கள் அல்லாமல், வேலை செய்யும் 84 நாட்கள் அல்லது 42 நாட்கள் வழங்கப்பட :வேண்டும்.

**ஆதாரம் - தொழிலாளர் நீதி கைநூல் (தொழிலாளர் திணைக்களம்)**



# மனித கடத்தல் தினம்

ஒவ்வொரு வருடமும் தைமாதம் 11ம் திகதி மனித கடத்தல் தொடர்பாக அறிவுறுத்தும் தினமாக நினைவுகூறப்படுகின்றது. இத்தினமானது மனித கடத்தலினால் பாதிக்கப்பட்டவர்களின் வேதனை தொடர்பாக அறிவுறுத்துவதுடன், அவர்களின் உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தலை நோக்காகக் கொண்டுள்ளது. மனித கடத்தல் என்பது பலத்தினால், மோசடியினால் அல்லது பலாத்கார உழைப்பு, உள்நாட்டுச் சேவை அல்லது பாலியல் வர்த்தக செய்றபாட்டிற்காக வேறு நபர்களை சுரண்டலுக்கு ஆளாக்குகின்றனர்.

**மனித கடத்தலானது, வெவ்வேறு முறைகளில் இடம்பெறுகின்றது. கீழ்க்கண்டவற்றின் மூலம் அவற்றை குறிப்பிடலாம்.**

- பலாத்காரமாக தொழிலாளர்களுக்கான வியாபாரத்தை மேற்கொள்ளுதல்.
- பலாத்கார வன்முறை செயற்பாட்டுக்களுக்காக கடத்தல்களை மேற்கொள்ளுதல்.
- பாலியல் கடத்தல்.
- உடல் உறுப்புக்களை அகற்றுவதற்காக கடத்தலை மேற்கொள்ளல்.
- உள்நாட்டு சேவை.

பாலியல் கடத்தல் என்பது, மனித கடத்தலை விடவும் பொதுவான வழிமுறையொன்றாவதுடன், மனித கடத்தலில் பெரும்பாலும் பாதிக்கப்படுவது, பெண்கள் மற்றும் சிறுவர்களாவர். 2020ல் மனித கடத்தல் தொடர்பாக இடம்பெற்ற உலகளாவிய அறிக்கைகளின் படி, பூகோள ரீதியில் மனித கடத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட மூவருள் ஒருவர் சிறுவராக இருப்பது மட்டுமன்றி, பாதிக்கப்படுவது நிச்சயமாக பெண்பிள்ளையாகத்தான் இருக்கும். உங்களுக்குத் தெரியுமா? இவ்வாறு கடத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்ற பெண்கள் மற்றும் சிறுவர்களுக்காக குடும்பம் அல்லது தொழிற்பிரிவில் வேலைவாய்ப்பை பெற்றுத் தருமாறு உறுதியளித்ததுடன், அவர்களை இதற்கு பதிலாக பாலியல் தொழிலாளர்களாக விபச்சார மடங்களுக்கு கொண்டு சென்றதுடன், அவர்களின் வெளிநாட்டு கடவுச் சீட்டு மற்றும் வேறு அடையாளப்படுத்தக்கூடிய பத்திரங்களையும் மனித கடத்தல்காரர்களினால் பறிமுதல் செய்யப்பட்டது.

இலங்கையினுள், பெண்கள், சிறுவர்கள், இனசிறுபான்மையினர் மற்றும் முதியவர்கள் பெரும்பாலும் பாதிக்கப்படக் கூடிய ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், பலாத்காரர்கள் மற்றும் தொழிலாளர்கள் பாலியல் கடத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். கொரோனா வைரஸின் தாக்கம், பொருளாதார நெருக்கடி போன்ற விடயங்கள் மீது நிகழ்காலமாகும் போது இலங்கையினுள் மனித கடத்தலானது அதிகரிக்கப்பட்டுள்ளது. நிகழ்காலத்தில் வெளிநாட்டிற்குச் செல்லும் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் அதிகரிக்கப்பட்டதுடன். அவர்கள் பல்வேறு கடத்தல்காரர்களின் பாதிப்புக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். அதனாலேயே சரியான முறையைப் பயன்படுத்தி சரியான தகவலின் அடிப்படையில் நீங்கள் இச்செயற்றிட்டத்தில் ஈடுபட வேண்டும். நீங்கள் இதுபற்றி கவனம் செலுத்தாவிட்டால், பாதிக்கப்படப்போகும் அடுத்த குழு நீங்களாகவும் இருக்க வாய்ப்புண்டு.

சுரம்யா

(இணையத்தினூடாக எடுக்கப்பட்டது)

# பாலியல் வன்முறை



பாலியல் வன்முறை என்பது ஒரு நபரின் விருப்பமில்லாது வார்த்தையால் அல்லது செயலால் பாலியல் ரீதியாக நடப்பது, பாலியல் வர்ணனை கருத்துக்கள், ஆபாச படங்கள் காண்பித்தல் மற்றும் பாலியல் கோரிக்கைகள் என்பன பாலியல் வன்முறைக்கு கருதப்படுகின்றது. இது வாய்மொழிமூலமாகவும், வாய்மொழியற்றதாகவும், எழுத்து வடிவ மூலமாகவும், பௌதீக உடல் மற்றும் மறைமுகமாகவும் காட்சிகள் மூலமும் நடைபெறுகிறது. வாய்மொழி ரீதியான துன்புறுத்தல் என்பது ஒரு நபரின் ஆடை, தனிப்பட்ட நடத்தை அல்லது உடலைப் பற்றிய கருத்துக்கள், கேள்விகள் அல்லது நகைச்சுவைகள் மற்றும் ஒரு நபரின் தனிப்பட்ட அல்லது பாலியல் வாழ்க்கை சம்பந்தமாக வதந்திகளை பரப்புவது என்பன இதனுள் உள்ளடங்கும்.

ஒரு நபரின் உடலை மேலும் கீழுமாக பார்ப்பது, பாலுறுப்புகளின் மூலம் இழிவான செய்கைகளை செய்தல், வேண்டுமென்றே ஒரு நபரை வேண்டுமென்றெ நெருங்குவது என்பன வாய்மொழி அல்லாத துன்புறுத்தலில் அடங்கும். நபரொருவரின் உடல் இயக்கத்தை தடுப்பது, ஒருவரை தேவையற்ற வகையிலோ ஒழுங்கற்ற வகையிலோ தொடுவது மற்றும் முத்தமிடுவது, கட்டிப்பிடித்தல், தட்டுதல், அடித்தல் உட்பட ஏனைய அனைத்து பொருத்தமற்ற தொடுகைகள் என்பன உடல் சார்ந்த பாலியல் துன்புறுத்தலாக அறிமுகப்படுத்தப்படுகிறது. காட்சிப் பாலியல் துன்புறுத்தலானது: பாலுறவைத் தூண்டும் படங்கள், சுவரொட்டி, நாட்குறிப்பு மற்றும் கணினி அல்லது தொலைபேசியின் மூலம் வெளியிட்டு காட்டுவது மற்றும் மற்றைய நபர்களுக்கு பாலியலை தூண்டும் வகையில் குறுஞ்செய்திகள் அல்லது மின்னஞ்சல் அனுப்புதல் மற்றும் பொருத்தமற்ற பாலியல் சம்பந்தமான வீடியோக்களை பகிர்வதுமாகும்.

வேலை செய்யுமிடத்தில் அதிகமான தொழிலாளர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர்.

வேலைத்தளத்தில் இடம்பெறும் பாலியல் துன்புறுத்தல் என்பது வேலை செய்யும் சூழலுக்கு , ஆண் பெண் சமத்துவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதுடன், வேலைவாய்ப்பில் அசாதாரணமான நடைமுறைகளை உருவாக்கும் மற்றும் தொழிலாளர்களின் கண்ணியத்திற்கும். நல்வாழ்விற்கும் விளைவை ஏற்படுத்துவனவாக மேற்கொள்ளப்படும் செயல்கள் பாலியல் வேறுபடுத்தல் என அழைக்கப்படும். இது பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் சோர்வு மற்றும் மனஅழுத்தத்தை உருவாக்குகின்றது. நீங்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டால், பின்வரும் நிறுவனங்கள் மூலம் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

**பெண்கள்,குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் சமூக அதிகாரமளித்தல் அமைச்சு**
5ஆம் மாடி, செத்சிறிபாய 11
பத்தரமுல்லை, இலங்கை
தொலைபேசி : **+94 11 2186055**
தொலை நகல் : **+94 11 218724249**
மின்னஞ்சல் : **secycdwa@gmail.com**

**இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு**
**WV2F+8F2, கொழும்பு 00700**
**0112 691 692**
**cert@cert.gov.lk**

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**
**1996**
**011 250 5575 / 077 308 8135 / 077 376 2112**
14 ஆர்.ஏ.த. மெல் மாவத்தை, கொழும்பு 4
**sechrcsl@gmail.com**
**www.hrcsl.lk**

சஸ்கா சாஜஹான்



# தொழிலாளர்களுக்கான அணிதிரட்டல் பயிற்சியின் இரண்டாம் கட்ட செயற்றிட்டம்

2023ம் ஆண்டின் டாபிந்து கூட்டமைப்பின் முதல் நிகழ்வாக வடக்குப் பிரதேசத்தில் இரண்டாம் கட்ட தலைவர்கள் 15 பேரை இணைத்து மேற்கொள்ளப்பட்ட ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கான அணிதிரட்டல் பயிற்சியின் 2ம் கட்ட செயற்பாடு மிகவும் சிறப்பாக கிளிநொச்சியில் இடம்பெற்றது. 2023ம் ஆண்டு தை மாதம் 7ம் மற்றும் 8ம் திகதிகளில் இடம்பெற்றதுடன். இந்நிகழ்விற்கு வள ஒருங்கிணைப்பாளராக கண்டி மாவட்ட மனித அபிவிருத்தி அமைப்பின் செயற்பாட்டாளரான கே.யோகேஸ்வரி அவர்கள் கலந்து கொண்டார். இங்கு ஊழியர்கள் அனுபவிக்கின்ற பிரச்சினைகள் மற்றும் அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகள், தொழிலாளர் உரிமைகள் உட்பட தொழிற்சங்கமொன்றை அமைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டது. அத்துடன் அவர்கள் முகங்கொடுக்கும சில பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன.


- உணவுப்பிரச்சினை
- மலசலகூட வசதியின்மை
- குடிநீர் பற்றாக்குறை
- ஊதியம் போதாமை
- வன்முறை செயல்கள்
- மேலதிக வேலைக்கான பற்றுச் சீட்டு வழங்காமை
- விடுமுறை பெறுவதற்கான அனுமதி வழங்கப்படாமை
- போக்குவரத்து பிரச்சினைகள் - போதுமானளவு பேரூந்து இருக்கைகள் இல்லாமை
- சுகாதார வசதியின்மை
- மனித வள முகாமைத்துவ குழுவானது, ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கருத்திற்கொள்ளாமை
- மனித வள முகாமையாளர்களினால் மேலதிய நேர வேலை செய்வதற்கு ஊழியர்கள் கட்டாயப்படுத்தப்படல்.
- தொழிலாளர்களுக்கு சீருடை வழங்கப்படாமை.

# வடக்கில் இடம்பெற்ற தொழிலாளர்களுடனான பரிந்துரை ரீதியான கலந்துரையாடல்

வடக்கிலுள்ள கிளிநொச்சி மற்றும் வவுனியா போன்ற பிரதேசங்களை மையமாகக் கொண்டு கடந்த மார்கழி மாதம் 18ம் திகதி மற்றும் தைமாதம் 21ம் திகதிகளில் அப்பிரதேசங்களினுள் வாழும் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுடன் இடம்பெற்ற முறைசாரா கலந்துரையாடலானது எமது இரண்டாம் கட்ட தலைவர்களின் தலைமையின் கீழ் இடம்பெற்றது. இங்கு தற்காலத்தில் நாட்டில் அதிகரித்து வரும் நெருக்கடிக்கு மத்தியில் அவர்கள் முகங்கொடுக்கும் சவால்கள், பிரச்சினைகள், அவர்கள் முகங்கொடுக்கின்ற பாலியல் வன்கொடுமைகள், துன்புறுத்தல்கள் மற்றும் வேலைத்தளத்தில் இடம்பெறும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.



# பொது சமையலறை







ஆடைத் தொழிற்சாலையில் தொழில்புரியும் ஊழியர்களின் போசணைச்சத்து தொடர்பான பிரச்சினையை தீர்க்கும் முகமாக, டாபிந்து கூட்டமைப்பின் மூலம் பொது சமையலறையானது இம்முறையும் மிக சிறப்பான முறையில் இடம்பெற்றது. தற்போதுவரை டாபிந்து கூட்டமைப்பின் மூலம் 15இற்கும் மேற்பட்ட தடவைகள் பொது சமையலறையானது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. மார்கழி மாதம் 3ம் திகதி மற்றும் இப்புது வருடத்தின் தைமாதம் 8ம் திகதிகளில் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தை





மையமாகக் கொண்டும் மார்கழி மாதம் 18ம் திகதி பியகம வர்த்தக வலயத்தை மையமாகக் கொண்டும், தை மாதம் 15ம் திகதி கட்டுநாயக்க வர்த்தக வலயத்திலும், பியகமவிலும் இடம்பெற்றது. அத்தோடு தை மாதம் 22ம் திகதி கிளிநொச்சி மற்றும் வவுனியா பிரதேசத்தை மையமாகக் கொண்டும், கட்டுநாயக்க பிரதேசத்தை மையமாகக் கொண்டு தை மாதம் 28ம் திகதி இச்செயற்றிட்டம் இடம்பெற்றது. இங்கு பகலுணவிற்காக சுமார் 56இற்கும் அதிகமான உணவுப்பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இச்செயற்றிட்டத்திற்காக Global Fund அமைப்பு மற்றும் தேவி லீ்.பர் அவர்களினால் நன்கொடை வழங்கப்பட்டது.

# குழு கலந்துரையாடல்

தொழிற்சங்க அமைப்புக்களின் அவசியம் மற்றும் எதிர்ப்பார்ப்புக்களை கண்டறிவதற்காக கம்பஹா மாவட்டத்திலுள்ள தொழிற்சாலைகளில் இருந்து 40 பேருடன் இணைந்து டாபிந்து கூட்டமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட குழு கலந்துரையாடலானது கடந்த நவம்பர் மாதம் 18ம் திகதி பியகம திலிண ஹோட்டலில் இடம்பெற்றது. இந்த செயற்றிட்டத்திற்கு வள ஏற்பாட்டாளராக திரு. கேசர கோட்டேகொட அவர்கள் கலந்து கொண்டார். இந்த செயற்றிட்டத்தினூடாக பணியாளர் தேவைகளைக் கண்டறிவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. அத்தோடு தொழிற்சங்க அமைப்பின் முக்கியத்துவம் பற்றி விளக்கமளிக்கப்பட்டதுடன், சுதந்திர வர்த்தக வலயத்தை மையமாகக் கொண்டு தொழிற்சங்கமொன்றை அமைப்பதற்கும் அனைவரும் சம்மதம் தெரிவித்தனர். அத்தோடு தொழிற்சங்கமொன்றை கட்டியெழுப்பும் போது நேரிடும் சவால்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.





1ஆம் பக்கத் தொடர்ச்சி **மனித உரிமைகள்...**

உருவாக்கப்பட்டதுடன், இத்திணைக்களத்தினூடாக தற்போது மேற்கொள்ளப்படுகின்ற பிரதான சேவைகள் கீழ்வருமாறு,

- அடிப்படை மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களின்போது அவற்றைப்பற்றி தேடிப் பார்த்தல்.
- அடிப்படை உரிமைகளுக்கமைய மாற்று சட்டங்களை இயற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
- நாட்டினுள் சட்ட அமைப்பானது, சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களுக்கமைய உருவாக்குதல்.
- மனித உரிமைகள் தொடர்பாக நாட்டு மக்களை அறிவுறுத்தும் பல்வேறு செயற்றிட்டங்களை மக்களிடையில் கொண்டு சேல்லல்.

அத்தோடு மனித உரிமைகள் ஆணையகத்திற்கு பதிலாக இலங்கையினுள் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நிறுவனங்களாக உயர் நீதிமன்றம், மனித உரிமைகள் அமைப்பு, மனித உரிமைகள் ஆய்வு மையம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சட்ட அமைப்புக்கள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

மேலும் பெண்கள் உரிமை தொடர்பாக கவனத்தை செலுத்தும் போது ஐக்கிய மக்கள் மூலம் 1979ம் ஆண்டு மார்கழி மாதம் 18ம் திகதி பெண்களுக்கு எதிராக அனைத்து முறைகளிலும் மேற்கொள்ளப்படுகின்ற வேறுபாடுகளை இல்லாதொழித்தல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டது. மனித உரிமைகளை அனுபவிக்கும் போது பெண்களுக்கு எதிராக அனைத்து வழிகளிலும் இடம்பெறுகின்ற பாகுபாடுகளை சமுதாயத்தினுள் தடுக்கும் நோக்குடன் 1981ம் ஆண்டு புரட்டாதி மாதம் 03ம் திகதியில் இருந்து இம் மாநாடு செயற்படுத்தப்பட்டது. இம் மாநாட்டின் கீழ் பெண்களுக்கு உரித்தான சில உரிமைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- பெண்களின் சிவில் மற்றும் அரசியல் உரிமை
- குடும்பத்தினுள் பெண்களின் உரிமை
- கல்வி மற்றும் பயிற்சி பெறுவதில் உள்ள உரிமை
- பொருளாதார நடவடிக்கை மற்றும் அதன் நன்மைகளுகான உரிமை
- சுகாதாரத்திற்கு மற்றும் போசணைக்குள்ள உரிமை
- சமூக வேறுபாட்டிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை

மேலும் மனித உரிமை தொடர்பாக கீழ்க்கண்ட விடயங்களை தெரிந்திருப்பது மிக முக்கியமாகும்.

- மனிதர்களின் அடிப்படை தேவையை பூர்த்தி செய்வது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூலம் உறுதியளிக்கப்படும்.
- உலகம் முழுவதும் வாழும் முறைகேட்டினால் பாதிப்புக்குள்ளான மக்கள் கூட்டத்தை பாதுகாத்தல்.
- மனித உரிமைகளினூடாக சமூக துஷ்பிரயோகத்திற்கு எதிராக குரல் கொடுப்பதற்கு மக்களுக்கு இடமளித்தல்.
- மனித உரிமைகளானது, கருத்து வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தை ஊக்குவிக்கின்றது.
- மனித உரிமைகளினூடாக மக்கள் தமது மதத்தை பின்பற்றுவதற்கு மற்றும் எந்தவொரு மதத்தையும் பின்பற்றாமல் இருப்பதற்கும் சுதந்திரம் வழங்கப்படுகின்றது.
- மனித உரிமைகளினூடாக மக்கள் தாம் விரும்பியவரை அன்பு செய்வதற்கும் இடமளிக்கப்படுகின்றது.
- மனித உரிமைகளினூடாக அனைவருக்கும் சமமான வேலை வாய்ப்புக்கள் வழங்குவதை ஊக்குவிக்கின்றது.
- மனித உரிமைகளினூடாக மக்கள் கல்வியை தொடர்வதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது.
- மனித உரிமைகளின் ஓர் பொதுவான தரநிலையினூடாக அரசாங்கமானது, அதன் சில பொறுப்புக்களை பிணைக்கின்றது.

மேற்குறிப்பிட்டவை போன்று, நாம் மனிதனாக இருப்பதனால், எமக்கு உரித்தாக வேண்டிய மனித உரிமைகள் பல உள்ளன. இங்கு குறிப்பிடப்பட்டவை அதன் சில விடயங்கள் மட்டுமே. உங்களுக்கு உரித்தாக வேண்டிய மனித உரிமைகள் மீறப்பட்டால் அது தொடர்பாக சட்டம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுரம்யா

(இணையத்தினூடாக எடுக்கப்பட்டது)

# வெளிநாட்டுச் செய்தி

Clean Clothes Campaign (CCC) வலைப்பின்னலானது, இவ்வருடம் மனித உரிமைகள் தினத்தை அடிப்படையாகக் கொண்டு "Living Wage (வாழ்க்கை ஊதியம்) எனும் பெயரில் குறும்படம் ஒன்றை தயாரித்துள்ளது. தினமும் ஆடைத் தொழிற்சாலையினுள் இடம்பெறும் அடிப்படை மனித உரிமைகளுள் ஒன்றான நல்ல ஊதியம் எனும் உரிமை தொடர்பாக அறிவுறுத்துவதற்காக இது தயாரிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஒவ்வொரு நாளும் போராட்டத்திற்கு முகங்கொடுக்கும் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களின் தனிநபர் கதையொன்றினை இதன்மூலம் அவர்கள் எமக்கு முன்வைத்தார்கள். இத்திரைப்படமானது, மத்திய, கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் (CCC) வலைப்பின்னலை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது இங்கு ஒன்றுதிரட்டப்பட்ட தரவுகளுக்கமைய, 1.7மில்லியன் அளவில் ஆடைத்தொழிலாளர்கள் காணப்படுவதுடன், பிரதானமாக ஐரோப்பாவில் பெண்கள், இவ்வலயத்தினுள் வறுமை ஊதியத்தை பெற்று வாழ்கின்றார்கள். இந்நாட்டினுள் அரசியலமைப்பானது, குறைந்தபட்சட நிகர ஊதியத்தினை ஐரோப்பா சங்கத்தினால் வரையறுக்கப்பட்ட சமூக வறுமை அறிக்கைகளைவிட, கணக்கறிக்கைகளுக்கு மேலதிகமாக, குறைந்து கொண்டு செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் தெரிவித்தபடி தொற்றுக்காலத்திலும் கூட ஆடை விநியோக சந்தைப்படுத்தல் தரம் மற்றும் சில்லறை வியாபாரிகளினால் ஈட்டப்பட்ட வருமானம் மிகப்பெரியது.

இத்திரைப்படத்தின் பிரதான குறிக்கோள் யாதெனில், ஐரோப்பிய மற்றும் குறைந்த வருமானம் திரட்டும் நாடுகளில் அலங்காரப் பிரிவுகளில், உலகளாவிய விநியோக பிரிவுகளில் ஊதியம் தொடர்பாக அறிவுறுத்துதல், அலங்காரத் தரப்படுத்தல் மற்றும் சில்லறை வியாபாரிகளுக்கு அவர்களின் முழு விநியோகத்திற்கான பொது, மானியம் ஆகிய முறைகளில் படிமுறையெடுத்தலை நினைவூட்டுவதற்காகும். அத்தோடு ஆடைத் தொழிலாளர்களுக்கு நியாயமான நேர அட்டவணையினுள் தேவையான வாழ்க்கையை கொண்டு நடத்துவதை உறுதிப்படுத்துவதற்காகும்.

**இணையம் மூலம் எடுக்கப்பட்டது.**

# எண்ணம்

2023 தை மாதம் பிறந்ததுடன், குளிர் வீசும் காற்றுடன் கூடிய காலநிலையானது, இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. காலையிலேயே எழும்புவதற்கு சோம்பலாக உள்ளது. போர்வையைப் போர்த்திக் கொண்டு இன்னும் கொஞ்சம் தூங்கக் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். கிராமம் என்றால் அடுப்படிக்கு சென்று அடுப்பருகில் இருந்து கொண்டு குளிர்காய்ந்திருக்கலாம். போடிங்கில் அவ்வாறு இல்லையே! சமைப்பதற்கும், துடைப்பதற்கும், உடுத்துவதற்கும், உறங்குவதற்குமென எல்லாம் செய்வதற்கும் எமக்கென்று இருப்பது, எட்டு அடி அளவுள்ள அறை மாத்திரமே.

மேலும் இவ்வாறு அகப்பட்டுக் கொண்டு எமது கனவு உலகிற்கு செல்ல முடியாது. சிவப்பு எச்சரிக்கை விடுப்பதற்கு முன்னர் தொழிற்சாலைக்கு சென்றுவிட வேண்டும். சிவப்பு எச்சரிக்கை விடுப்பதற்கு முன்னர் தொழிற்சாலையினுள் உட்புகா விட்டால், அதிலும் சம்பளவெட்டு நடைபெறும். நாட்டினுள் இடம்பெறும் செய்திகளுக்கமைய, எமது தொழிற்சாலையை எப்போது மூடுவார்கள் என்று யாருக்கும் தெரியாது. அவ்வாறு நடந்தால் செத்த கதைதான். நாட்டினுள்ள வெவ்வேறு நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருகின்றன. இந்நாட்களில் எமது ஊதியத்தில் இருந்து பூச்சிய வீதம் வெட்டப்படுகின்றது. ஆனால், முட்டையின் விலை அதிகரித்து விட்டது. ஆகக்குறைந்த விலையில் இருந்த பொருள் முட்டை மட்டும்தான். கட்டுப்பாட்டு விலையின்மையால் வியாபாரிகள் தாம் விருப்பத்திற்கேற்ப விலையை அதிகரித்து பணத்தை சுரண்டுகின்றனர்.

உரப்பிரச்சினையால் விவசாயிகள் நிலைதளர்ந்துள்ளனர். விவசாய இடமும் பாழற்று கிடக்கின்றது. தைத்தொழில் பிரிவும் வீழ்ச்சியடைந்துள்ளது. பல்வேறு அரசியல் கட்சிகளுக்கிடையில் பாகுபாடு காணப்படுகின்றது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான கேள்வி அதிகரித்துள்ளது. மனித கடத்தலும் அதிகரித்துள்ளதுடன், போதைவஸ்து பாவணை அச்சுறுத்தல் அதிகரித்து மனித கொலை தொடர்பான செய்தியும் தினமும் கேட்பதற்கு கிடைக்கின்றது. அத்தியாவசிய பொருட்களின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக மனிதர்கள் திருடுவதற்கு பழக்கப்பட்டுள்ளனர். மனித நேயம் அழிந்து சுயநலம் நிறைந்துள்ளது. போராட்டத்திற்கும் முடிவில்லை.

எண்ணங்களுக்கிடையில் சிக்கி அகப்பட்டுக் கொண்டிருக்கும் நாம் என்ன செய்வது? எமது தொழிலும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

சமந்தினி




கடந்த காலங்களில் கொவிட் தொற்றினால் நாம் முகங்கொடுத்த சவால்கள் மற்றும் பாதிப்பை தற்போது அனைவரும் மறந்து இருப்பார்கள். ஆனால், தற்கால கட்டத்தில் இக்கொவிட் வைரஸைப் பற்றி யாரும் பேசாவிட்டாலும், இன்னும் இவ்வைரஸானது, இவ்வுலகினுள் தாக்கத்தை செலுத்துகின்றது. தற்போது COVID-Omicron XBB எனும் பெயருடைய கொரோனா வைரஸின் நவீன வகை, கொடிய விளைவு மற்றும் சரியாக கண்டறியவும் சிரமமாகும். நவீன வைரஸாகிய COVID-Omicron XBB இன் நோய் அறிகுறிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. **இருமல் இன்மை.**
2. **காய்ச்சல் இன்மை.**
3. **மூட்டு வலி.**
4. **தலைவலி.**
5. **கழுத்து வலி.**
6. **மேல் முதுகு வலி.**
7. **நியுமோனியா.**
8. **பொதுவாக உணவு உண்பதற்கு விருப்பமின்மை.**

COVID-Omicron XBB டெல்டா வைரஸானது, வேறுபாடுகளை விட ஐந்து மடங்கினால் அதிகமான தாக்கத்தை செலுத்துவதுடன், அதை விடவும் உயிரிழக்கும் சாத்தியமானது அதிகளவில் காணப்படுகின்றது. அதன் நிலைமை மோசமாக காணப்படுவதனால் குறுகிய காலம் மட்டுமே உயிர் வாழ்வதற்கு வாய்ப்புக்கள் காணப்படுவதனால், சில நேரங்களில் முறையான நோய் அறிகுறிகளும் காணப்படவதில்லை. இவ்வைரஸானது, ஒப்பீட்டளவில் சிறிது காலத்திற்குள், நுரையீரலுக்குள் சென்று தாக்கம் செலுத்துகின்றது. COVID-Omicron XBB நோயானது, பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதுடன், சிலருக்கு காய்ச்சல் மற்றும் வேதனையுடன் கூடிய வகையிலான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால், x-ray மூலம் மென்மையான மார்பில் நியுமோனியாவை அடையாளம் காட்டியுள்ளது.

Covid-Omicron இற்காக நாசல் ஸ்புப் பரிசொதனையானது, (சுவாச தொற்றை ஏற்படுத்தும் வைரஸ் மற்றும் பக்டீரியாவுக்காக மேற்கொள்ளப்படும் பரிசோதனை) பெரும்பாலும் எதிர்மறையாவதுடன், போலி எதிர்மறை நாசோபரின்ஜியல் பரிசோதனை (சுவாச தொற்றை ஏற்படுத்தும் வைரஸ் மற்றும் பக்டீரியாவுக்காக மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளுள் ஒன்று) அதிகரித்துக் கொண்டு காணப்படும். இதிலிருந்து வெளிப்படுவது யாதெனில், வைரஸானது, சமூகத்தினுள் பரவி, நுரையீரலுக்குள் நேரடியாக சென்று தொற்றை ஏற்படுத்துகின்றது. Covid – Omicron XBB ஆனது, அதிக தொற்றுக்குள்ளாக்கும், கொடிய வைரஸ் மற்றும் மற்றும் உயிர்க்கொல்லியாகும் என்பது இதிலிருநது தெளிவாகின்றது. கவனமாக இருங்கள். கூட்டமாக இருக்கும் பொது இடங்களை தவிருங்கள். திறந்த இடங்களிலும் 1.5 மீட்டர் இடைவெளியை பேணுங்கள். சரியான முறையில் முகக் கவசத்தை அணியுங்கள். அனைவருக்கும் நோய் அறிகுறிகள் இல்லாதிருந்தாலும், (இருமல் அல்லது தும்மல் இல்லாதவிடத்தும்) அடிக்கடி கை கழுவுங்கள். இவ் Covid – Omicron XBB ஆனது, கொவிட் -19 விடவும் கொடூரமானது. அதனால் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டியதுடன், கொரோனா வைரஸிற்கும் எதிராக சக்தமிக்க பாதுகாப்புக்களையுமட கடைபிடிக்க வேண்டும்.

**இணையம் மூலம் எடுக்கப்பட்டது.**




# சர்வதேச கல்வி தினம்

கல்வி என்பது மனித உரிமை, பொது நலன் மற்றும் பொதுக் கடமையாகும். அதனாலேயே உலகளாவிய அமைதி மற்றும் நிலையான அபிவிருத்திக்காக கல்வியியல் பணிகளைக் கொண்டாடுவதற்கு பதிலாக ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது, தைமாதம் 24ம் திகதியை சர்வதேச கல்வி தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. 2018ம் ஆண்டு மார்கழி மாதம் தொடக்கம் இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், “மனிதர்ளுக்காக முதலீடு செய்தல், கல்விக்கு முன்னுரிமை வழங்குதல்” என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு கொண்டாடப்படுகின்றது.

கல்வி என்பது மனித உரிமைகளுள் ஒன்றாவதுடன், தற்காலத்தில் துரதி‘டவசமாக உலகம் முழுவதும் இவ்வுரிமை மீறப்பட்டு வருகின்றது. யுனெஸ்கோவில் (UNESCO) குடிவரவு தரவுகளுக்கமைய, மதிப்பீடு செய்யப்பட்ட 258 மில்லியன் மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாத மாணவர்களாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. மாணவரொருவர் பாடசாலைக்கு செல்லாமல் இருப்பதற்கான முக்கிய காரணமாக இருப்பது, சமவுரிமை தொடர்பான பிரச்சினையாகும். இந்த ஏற்றத்தாழ்வுகளுக்கு ஆண்-பெண் பாலினம், சுகாதாரம் மற்றும் கலாசார அடையாளங்கள் என்பன உள்ளடங்கும். அத்தோடு பாடசாலைக்கு செல்வதற்காக தேவையான உபகரணங்களை பெற்றுக் கொள்வதில் காணப்படும் இயலாமை. பொருளாதார பற்றாக்குறை. ஆசிரியர்களின் பற்றாக்குறை என்பனவும் தாக்கம் செலுத்துகின்றன.

நெல்சன் மண்டேலா அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போன்று உலகை மாற்றுவதற்கு நீங்கள் பயன்படுத்தக் கூடிய மிகப் பலம்வாய்ந்த ஆயுதமாக இருப்பது கல்வியாகும். உலகத்தை மட்டுமல்ல, உங்களை நீங்கள் மாற்றிக் கொள்வதற்கும் அவசியமாக இருப்பது கல்விதான். வறுமையில் இருந்து மீள வேண்டுமாயின், நாம் செய்ய வேண்டியது முறையான கல்வியினூடாக பலமடைய வேண்டும். பல்கலைக்கழகம் வரை கல்வியை தொடர்வது மட்டும் இதன் மூலம் குறிப்பிடப்படவில்லை. சுதந்திர கல்வி காணப்படும் இலங்கையினுள் கல்வியை பெறுவதற்கு பல்வேறு முறைகள் காணப்படுகின்றன. இலங்கையில் தேசிய தொழில் அமைப்புக்கள் (NVQSL) முதற் படிமுறையிலிருந்து ஏழாம் படிமுறை வரை ஏழு செயல்பாட்டு தகுதிகளை வழங்குகின்றன. இலங்கையில் திறந்த பல்கலைக்கழகத்தில் மற்றும் தொழின்முறை தொழிநுட்ப பல்கலைக்கழகத்தில் பட்டம் நிலைக்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வழங்கப்படுகின்றது. 37 தொழிநுட்ப கல்லூரிகளில், இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவனம் மற்றும் இலங்கை தொழிநுட்ப கல்லூரி என்பன மூலம் டிப்ளோமா மட்டம் வரையான கல்வி மற்றும் பயிற்சி வழங்கப்படுகின்றது. இவ்வாறு வெவ்வேறு முறைகளினூடாக பெற்றுக் கொள்ளக்கூடிய சுதந்திர கல்வியினூடாக உங்களுக்கும் உங்களது வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொள்ள முடியும்.

சுஜா

## தொழிலாளர் செய்தி

# வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் பொருளாதாரத்திற்கு மத்தியில் நெருக்கடிக்குள்ளான ஆடைத் தொழிலாளர்கள்

தற்காலத்தில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் தொழிலாளர்கள் அவர்களின் கெட்டதனம் மற்றும் பயம்மிக்க கனவுகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். விசேடமாக ஆடைத்தொழிற்சாலையில் பாரிய பின்னடைவை சந்திக்க நேர்ந்துள்ள தொழிலாளர்களுக்கு எவ்வித கொடுப்பனவு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வேலை நேரங்கள் இன்மையால் வேலையிலிருந்து விலகுவதற்கு நேரிடுகின்றது. தற்போதையளவில் தரவுகளினூடாக வெளிப்படுவது யாதெனில், தொழிற்சாலைகள் முன்னைய காலத்தில் அறிக்கையிடப்பட்ட வீழ்ச்சிகளுக்கு பதிலாக மேலும் நூற்றுக்கு 25 வீதம் வீழ்ச்சியை சந்திக்க நேரிடும் என்பதாகும். சிறு அளவிலான தொழிற்சாலைகள் மட்டுமல்லாது, நடுத்தர அளவிலான மற்றும் பாரியளவான தொழிற்சாலைகளும் தற்போது அதன்அ ஊழியர்களுக்கு நாள், வாரம், மாதக்கணக்கில் விடுமுறை வழங்குவதன் காரணமாக ஆடைத் தொழிலாளப் பெண்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

அத்தோடு கடந்த இரண்டு வருடங்களாக, சம்பள உயர்வு ஏற்படாமை, சலுகை கொடுப்பனவு வழங்காமை, மேலதிக நேரவேலை கொடுப்பனவு வழங்காமை, குறைந்த பட்சம் அடிப்படை சம்பளமாவது கிடைக்கப்பெறாமை போன்ற காரணங்களும் அவர்களை இவ்வாறானதோர் நெருக்கடிக்கு உட்படுத்தியுள்ளது. இந்நெருக்கடிக்கு மத்தியில் அவர்களுக்கு ஏற்படும் அநியாயங்களை முன்வைப்பதற்கு, தொழிற்சங்கம் அமைத்தலில் அல்லது அதனுடன் இணைந்து தொடர்புறும் போது அவர்களை தொழிலிருந்து நீக்குகின்றனர். இலங்கையில் 1978ம் ஆண்டு அரசியலமைப்பின்படி, 14 (1)டி அதிகாரம் மூலம், தொழிற்சங்கமொன்றை அமைப்பதற்கு மற்றும் அதனுடன் தொடர்பு கொள்வதற்கு காணப்படும் உரிமை தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறாயின், தொழிலாளர்கள் தொழிற்சங்கமொன்றை உருவாக்கும் போது அல்லது அதனுடன் இணைந்து செயற்படும் போது அவர்களை தொழிலிருந்து நீக்க முடியுமா?



இல, 221, வெலபட வீதி, கட்டுநாயக்கவை வசிப்பிடமாகக் கொண்ட எச்.ஜ.சமன்மலி ஆகிய என்னால் ரத்வெகி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.